<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 20.11.2025

அசல் வழக்கு எண். 68/2021

வா.சா. 1 – ராஜேஷ் மூத்தா, த/பெ. மதன் ராஜ் மூத்தா

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாவா சொத்துக்கு சம்பந்தம் இல்லாதவர்கள் என்று பத்தி 5ல் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். ஆனால் பத்தி 6ல் முதல் பிரதிவாதி பயிரிட்டார்கள் என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 759/1996 பூந்தமல்லி நீதிமன்றத்தில் தீர்ப்பு பற்றி எதிர் வழக்குரையில் போடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எதிர் வழக்குரையை படித்தீர்களா என்றால் ஞாபகம் இல்லை. செல்வராஜ் என்பவர் யார் தெரியுமா என்றால் முதல் பிரதிவாதி எம் எஸ் ரவி என்பவரது தகப்பனார் ஆவார். நீங்கள் வழக்கு சொத்தை கிரையம் வாங்கிய தேதி ஞாபகம் இருக்கிறதா என்றால் ஞாபகம் இல்லை. நீங்கள் கிரையம் வாங்கிய தேதியில் மேற்படி பூந்தமல்லி நீதிமன்ற அசல் வழக்கு 759/1996 நிலுவையில் இருந்தது தெரியுமா என்றால் தெரியாது அந்த தீர்ப்பின் தீர்ப்பாணையை இந்த வழக்கில் தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. முதல் பிரதிவாதியின் தகப்பனார் மேற்படி வழக்கில் வழக்கு சொத்தில் இடையூறு செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்து கட்டளை பரிகாரம் பெற்றார் தெரியுமா என்றால் தெரியாது. அது வழக்கறிஞர் ஆஜராகி எதிர் வழக்காடிய பிறகும் செல்வராஜுக்கு ஆதரவாக தீர்ப்பான விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது வாதியின் வழக்கறிஞர் அது ஒரு தலைப்பட்ச உத்தரவு

என்று தெரிவித்தார் அந்த ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது. உங்களுக்கு கிரயம் கொடுத்தவருக்கு அவரது வழக்கறிஞர் எம் கே ரங்கராஜன் என்பவர் ஆஜரானார் அந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் உங்களுக்கு கிரயம் கொடுத்த ராஜகோபால் ஒரு தரப்பினர் அதுவாவது தெரியுமா என்றால் தெரியாது. அந்த இடைக்கால உத்தரவு இதுநாள்வரை நீக்கப்படவில்லை என்கிற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உங்களுக்கும் உங்கள் கிரையதாரர் ராஜகோபால் என்பவருக்கும் விரோதம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். பிரமாண வாக்குமூலம் கொடுத்ததாக சொல்கிறீர்கள் அந்த பிரமாண வாக்கு மூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விசாரணை எதுவும் செய்யப்படவில்லை என்றால் அந்த வழக்கு பற்றி எனக்குத் தெரியாது. மோகன் என்பவரை தூண்டி விட்டு பிரதிவாதிகள் உங்களிடத்தில் தகராறு செய்ததாக சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். ஆனால் பிரமாண வாக்குமூலத்தில் உங்களுடைய வாடகைதாரர் மோகன் என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மோகன் கண்ணன் என்று இரண்டு நபர்களை சொல்லி உள்ளீர்கள் இந்த இரு நபர்களையும் வழக்கில் விசாரிக்க போகிறீர்களா என்றால் விசாரிக்க போகிறேன். நீங்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் 1996 ஆம் ஆண்டு மேற்சொன்ன வழக்கின் தீர்ப்புக்கு பிறகு தான் என்று சொன்னால் சரி இல்லை. நீங்கள் வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. சிட்டா, அடங்கல் அனைத்தும் தாக்கல் செய்து உள்ளீர்கள் அவை அனைத்தும் 2021 ஆம் ஆண்டு ஆவணம் என்றால் சரிதான். 1997 ஆம் ஆண்டு கடைசி கிரையம் நடைபெற்றது என்றால் சரியில்லை கடந்த 2004 ஆம் ஆண்டு கடைசி கிரையம் ஏற்பட்டது. 2004 ஆம் ஆண்டுக்கு பிறகு தொடர்ச்சியாக வருவாய் ஆவணங்கள் தாக்கல்

செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் 2000 ஆண்டு வரை எழுதிய ஆவணங்களில் நாங்கள் குத்தகை விட்டு நிலத்தை பயிரிடவில்லை நாங்களே பயிரிட்டு வந்தோம் என்று எழுதி உள்ளீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. அந்த குறிப்பிட்ட காலகட்டத்திற்கு உண்டான அடங்கல் கணக்கினை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சாஆ25 அத்துமீறி உள்ளே நுழைய முயற்சி செய்ததாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் கண்ணன் என்பவர் புகார் கொடுத்துள்ளார் அந்த புகார் ஆனது உரிமையியல் சார்ந்த பிரச்சனை என்று முடிக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. வா.சாஆ22 மோகன் என்பவர் கண்ணன் என்பவருக்கு எழுதிக் கொடுத்த கடிதம் பற்றி தெரியுமா என்றால் தமிழில் உள்ளதால் எனக்கு தெரியாது. எதற்காக வழக்கில் தாக்கல் செய்தீர்கள் என்றால் தெரியாது. சிட்டா அடங்கல் அனைத்தும் கிராம நிர்வாக அதிகாரி கொடுத்தது என்றால் சரிதான். இந்த வகையில் பயிர் செய்தேன் என்று வட்டாட்சியரிடம் மனு கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை. ஆதியில் வழக்கு சொத்து பாலகிருஷ்ணன் நாயுடு என்பவருக்கு சொந்தமானது என்று சொன்னால் ஞாபகம் இல்லை. பாலகிருஷ்ணன் என்பவரிடமிருந்து பத்மநாபன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் ஞாபகம் இல்லை. பாலகிருஷ்ணன் என்பவரிடம் ரவியின் தகப்பனார் செல்வராஜ் குத்தகைக்கு இருந்தார் தெரியுமா என்றால் தெரியாது. பத்மநாபன் கிரையம் வாங்கிய பிறகு செல்வராஜ் தொடர்ந்து குத்தகைக்கு பயிர் செய்து வந்தார் என்றால் தெரியாது. செல்வராஜ் குடும்பத்தினர் தொடர்ந்து அந்த இடத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியில்லை. அவர்கள் கிணறு தோண்டி மொத்த செலவு செய்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால்

சரியில்லை. நீங்கள் அடிப்படையாக பைனான்ஸ் தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் சரியில்லை. நான் விவசாயம் சார்ந்த தோட்டக்கலை தொழில் செய்து வருகிறேன். நீங்கள் தோட்டக்கலை தொழில் செய்கிறீர்கள் என்று வழக்குரையில் சொன்னீர்களா என்றால் ஞாபகம் இல்லை நீங்கள் அடிப்படையாக வட்டிக்கு விடும் தொழில் செய்பவர் என்றால் சரியில்லை. வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. உங்கள் ஏரியாவிற்கு வட மாநில போலீசார் வந்தார் நீங்கள் அட்டகாசம் செய்வீர்கள் என்றால் சரியில்லை. உங்களுடைய காவல் நிலையம் எந்த காவல் நிலையம் என்றால் மாங்காடு காவல் நிலைய எல்லைக்குள் இருக்கிறது. வட இந்திய காவல்துறை உயர் அதிகாரிகளை வைத்து நீங்கள் மிரட்டுவீர்கள் என்றால் சரியில்லை. பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் குத்தகைதாரர்களாக தொடர்ந்து இருந்து வருகிறார்கள் என்றால் சரியில்லை. சொத்து வாங்கும் பொழுது செல்வராஜனுடைய சாட்சி கையொப்பம் வாங்கினீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. உங்களுக்கு கிரயம் கொடுத்த ராஜகோபால் என்பவர் செல்வராஜ் என்பவர் உடன் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் விவசாய வங்கியில் அடமானம் போட்டு கடன் வாங்கி வழக்கு சொத்தினை அபிவிருத்தி செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் பகரப்பட்ட தீர்ப்பு இது நாள் வரை அமலில் இருக்கிறது என்றால் சரியில்லை. மேற்படி சூழ்நிலையில் அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக நீங்கள் சுவாதீனத்தில் இருப்பதாக இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியில்லை. பிரதிவாதிகள் தரப்பில் இடைக்கால மனுவில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் தங்களுக்கு நன்கு தெரியும் தெரிந்தே நீங்கள் அதை மறைக்கிறீர்கள் என்றால் சரியில்லை. வா.சாஆ21

இந்த வழக்கில் நீங்கள் ஒரு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளீர்கள் சொத்தினை சரண்டர் செய்துவிட்டதாக சொல்லி உள்ளீர்கள் அது எந்த தேதியில் எழுதப்பட்டது தெரியுமா என்றால் அக்டோபர் 3 என்று இரண்டாவது பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. எந்த தேதியில் ஒப்படைக்கப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. அந்த முத்திரைத்தாள் 12.09.1995 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வாக்குமூலம் அளித்தது போல் 03.10.1995இல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மேற்படி ஆவணம் இதற்கு முன்பு பூந்தமல்லி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் முதல் முறையாக இந்த நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பங்கள் அனைத்திலும் பிரதிவாதிகள் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியில்லை. எல்டி என்று எழுதப்பட்ட இடத்திற்கு அருகில் செல்வராஜ் என்று எழுதப்படவில்லை என்றால் இல்லை மேற்படி பிரமாண வாக்குமூலம் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்று சொன்னால் சரி இல்லை. முந்தைய பூந்தமல்லி நீதிமன்ற வழக்கு குறித்து எதிர் வழக்குறையிலும் உறுத்து கட்டளை மனுவிலும் சொல்லப்பட்டுள்ள விவரத்தை மறுத்து முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் நீங்கள் கூறியுள்ளீர்கள் என்றால் தெரியாது. பூந்தமல்லி நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு உங்களை கட்டுப்படுத்தும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்றால் சரி இல்லை. நீங்கள் சுவாதீனத்தில் இருப்பதாக தவறாக வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram